செ.வெ.எண்:33 நாள்:19.01.2018

# பத்திரிக்கை செய்தி

அரியலூர் மாவட்டத்தைச் சார்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கு இலவச சுயம்வரம் நிகழ்ச்சி 11.02.2018 அன்று சேலம் மாவட்டத்தில் பழைய பேருந்து நிலையம் அருகில், நேரு கலையரங்கத்தில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் தகவல்.

அரியலூர் மாவட்டத்தைச் சார்ந்த அரசு பணியில் உள்ளவர்கள், தனியார் நிறுவனங்களில் பணிபுரிபவர்கள், சுயத்தொழில் புரியும் மாற்றுத்திறனாளிகள் திருமணம் புரிவதற்கு ஏதுவாக இலவச சுயம்வரம் நிகழ்ச்சி 11.02.2018 அன்று சேலம் மாவட்டத்தில் பழைய பேருந்து நிலையம் அருகில், நேரு கலையரங்கத்தில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், மேலும் மாற்றுத்திறனாளிகள் எளிதாக விண்ணப்பங்களை (www.salemsuyamvaram.com) என்ற இணைய தளத்தில் 03.02.2018 தேதிக்குள் பதிவு செய்திடவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே அரியலூர் மாவட்டத்தில் உள்ள தகுதிவாய்ந்த அனைத்து மாற்றுத்திறனாளிகளும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.